ஒட்டு அக வெட்டு -க.சீ. சிவ குமார்

கருநீல நிறத்தில் அந்தக் கார் ஒரு மாலைநேரத்தில் எங்கள் வீட்டின் முன் வந்து நின்றது. அப்போது.உண்மையில் மாலை மயங்கி அந்தியின் குடை விரிந்துவிட்டிருந்தது..ஆனால், வீட்டின் முன்னால் எரிந்துகொண்டிருந்த குழல் விளக்கு மாலை நேரத்தை மனதில் இருந்து மங்கவிடாமல் செய்திருந்தது.இந்தக் கார்எவ்வளவு அற்புதமான நிறம்..பட்டுக் கரு நீலம். நான் சிறுவனாயிருந்த நாட்களில், இதே வர்ணத்தில் அப்பா ஒரு கேமலின் பேனா வைத்திருந்தார்.வாழ்வின் சில பத்தாண்டுகள் அவர் கேமலின் பேனாவோடு உறவுடனிருந்தவர். சமீபத்தில்தான் மசிப்பேனாவைக் கைவிட்டு 'பந்துமுனை உபயோகித்தெரியும் பேனாக்களுக்கு' மாறியிருக்கிறார்.

இப்போதும் எனது எழுதுகோல்களை விட அதிகப் பெறுமானமுள்ள பேனாக்களையே பாக்கெட்டில் செருகியிருப்பார்..எனக்கு ஒரு முறை அன்பளிப்பாகக் கிடைத்த பார்க்கர் பேனாவை அவரிடம் காட்டிப் பெருமை கொள்ளமுடியாத படிக்கு எங்கேயோ அது ரகசிய ஆழத்தில் போய்விட்டது.அப்பா வெல்லுகிற விஷயங்களில் அவரது பேனாவும் கையெழுத்தும் அடங்கும்.அடங்காத பல விஷயங்களும் உள்ளன.கருநீல நிறப் பேனா அவர் வைத்திருந்தது என்னுடைய தொடக்கப்பள்ளிக் காலத்தில். அப்போது அவர் எனக்கு 'லைஃப் வின்'பேனா வாங்கிக் கொடுத்திருந்தார்.

வீட்டின் முன்பு வந்து நின்ற காரில் இருந்து யார் இறங்குகிறார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தபோது யாரும் இறங்கவில்லை. ஓட்டி வந்தவர் அப்பாவைப் பார்த்துப் புன்னகைக்கவும் அப்பா அருகில் சென்றார். .அதையொட்டி நானும் அருகில் சென்றபோது அப்பா என்னிடம் "நம்ம கார்தாண்டா இது." என்றார்.கார்க் கண்ணாடியின் மேல் பக்கத்தில் தங்க நிறத்தில் ஒரு செவ்வகம் கட்டி அதன் மத்தியில் எனது மகளின் பெயர் எழுதப்பட்டிருந்தது. ஈன்ற பொழுதிலும் ஈனப்படுகின்ற பொழுதிலும் யாரும் உவப்படைய முடியாது... ஆனாலும் அந்த உவமைக்கு நிகராக அப்போது உவப்படைந்தேன்.துல்லியமாகவே என் சிறுவ வயதின் மகிழ்ச்சி ஒன்று நிழலாடியது.

அது ஒரு காலை நேரம். அப்பா வீட்டின் முன்னால் ஒரு லாரியில் வந்து இறங்கினார். லாரியின் தலையில் என் பெயர் எழுதியிருந்தது..லாரி நிறைய சோளத் தட்டைகள். அப்பா விவசாயிகளுக்கு விற்பதற்காக வியாபார நிமித்தம் வாங்கி வந்திருந்தார்.என்னிடம் , "தட்டு விலை பேசி வச்சிட்டு லாரிக்கு பாத்துக்கிட்டு இருந்தேண்டா..... உம் பேரு எழுதி இந்த லாரி வந்திச்சு.என்ன வாடகை ஆனாலும் பரவாயில்லைன்னு இதையே எடுத்துக்கிட்டு வந்திட்டேன்." என்றார்.

பெயர் கண்டு மகிழ்வதற்கு வாடகை வாகனம் என்றோ சொந்த வாகனம் என்றோ அவசியங்கள் இல்லை.மகளின் பெயரெழுதிய கருநீல நிறக் கார்முன்பாக நின்று அப்பா செய்த வியாபரங்களை எண்ணிக்கையிடத் தலைப்பட்டுத் தோற்றேன்.கருவாட்டு வியாபாரம் செய்யவில்லை.நிதி நிலை கருதி கப்பல் வியாபாரம் செய்யவில்லை.மற்றபடி புகையிலை

முதல் புண்ணாக்கு வரைஒரு அறுபதுக்குக் குறையாமல் வியாபாரங்கள் இருக்கும் அவர் செய்தவை..''ஏறு !குலதெய்வம் கோயிலுக்கு போயிட்டு வந்திடலாம்.'' என்றார் அப்பா.

நானும் மகளும் டிரைவரின் பக்கத்தில் அமர்ந்தோம். தனது பெயர் எழுதியது பற்றி மகிழ்ச்சி கொள்ளும் வயதில் மகள் இல்லை.அயல்கள் மற்றும் தான் போன்றவை தெளிவுபடாத சின்னஞ்சிறுமியாக அவள் இருந்தாள். வளையற் செவ்வக வெட்டுகளுக்குள் காரின் ஸ்பீடா மீட்டருக்குள் ஒளிரும் வண்ணங்களையும் விரைவுகாட்டி முட்களின் ஒளிரும் பச்சைக்குள்ளும் தன் உவகைத் தியானத்தை நிறுத்தியிருந்தாள்.தியானம் கலைந்த நேரங்களில் பிஞ்சுக் கைகளால் கியர் மாற்ற முயற்சித்தாள்.

கோயிலுக்குப் போய்விட்டு வந்த இரவில் களைப்பில் உறங்கும் சிறுமியை முத்தமிட்டுவிட்டு நான் மனைவியைப் பார்க்க ஐநூறு கிலோ மீட்டர்கள் கொண்டிருந்த மாநகர் நோக்கிப் புறப்பட்டேன்.நானும் மனைவியும் தூரத்துப் பெரு  நகரின் பல அடுக்குகளையும் எங்கள் வேலை நேரங்களின் மாறுந் தன்மையையும் யோசித்துத்தான் மகளை எங்கள் வீட்டில் வளரவிட்டது.வெய்யில் சூடேறாத காலைப்பொழுதில் மாநகர் சென்று மனை சேர்ந்து மனைவியிடம் 'கார்' வந்திருக்கிற விஷயத்தைச் சொன்னேன்.. 'இன்று வியாழக்கிழமை' என்று நான் சொன்ன பாவனையில் ''உம்'' என்றாள்.

''வண்டில நம்ம பாப்பா பேருதான் எழுதியிருக்கு.''''சரி'' என்று சொன்னபோது உணர்வுகளை மறைக்கவோ நடிக்கவோ எத்தனித்தாள். அவளது கண்களுக்குள் இளங்காற்றின் கொடியூஞ்சல் ஆடியதை நான் பார்த்தேன்.அந்த நாளுக்கு ஒரு மாதம் கழித்து கிராமத்தில் இருந்து வந்த ஒரு போனின் கடைசி, ''கிடாவெட்டு சூப்பரா இருந்துச்சு மாப்ள.'' என்றது.

''உங்களுக்கு என்ன கிடாவெட்டு காதுகுத்துன்னு நல்லாத்தான் நாளுக போகுது...'' என்று மச்சான் முறையாகப்பட்டவரின் தொடர்பைத் துண்டித்தேன்.மறுபடியும் அதே போன்றதொரு செய்தியைத் தாங்கி வந்த தொலைபேசி ஒன்றில் நான் விழிப்புற்று விசாரிக்க, '' உங்களுதுதான் கிடாவெட்டு. உனக்கே சொல்லாமக் கூட கிடாவெட்டிட்டாராட்டமா இருக்குது.'' என்று பதில் வந்தது.

''நம்மகிட்ட கூட சொல்லாம அப்படி என்ன விஷேசம் வெச்சிருக்கார் உங்க அப்பா?'' என்றாள் மனைவி.''இங்கே எதாவது ஒரு நல்ல ஹோட்டலில் ஆளுக்கு நூறு ரூபாய்க்கு கறி தின்பதை விட இதில் நாம் வருத்தப்படுவதற்கு ஒன்றுமில்லை.'' என்று அவளைத் தேற்றினேன்.''எதாவது வியாபாரத்தில் அஞ்சாறாயிரம் லாபம் கிடைத்திருக்கும் அதுல ஒரு குஷியாகி ஒரு எட்டாயிரம் செலவுல கிடா வெட்டியிருப்பார்''

மனைவியும் நானும் எங்கள் ஊருக்குப் போகும் நாளொன்று வந்தது. ஊரில் இறங்கி வீட்டுக்குப் போனபோது அப்பா இல்லை. அம்மா சமையல் கட்டினுள் இருந்தாள். பாப்பா தூண் ஓரம் நின்றிருந்தாள். எங்கள் இருவரையும் யாரையோபோலப் பார்த்தாள். பாசத்தின் காந்தம் ஆழத்துக்குள் கிடந்தது..யாரு நீங்க? எந்த ஜென்மத்து உறவு? என்பதாக ஒரு பார்வை. கறுத்த நிறம் மேலும் கறுத்து கைகால்கள் குச்சிகுச்சியாக இருந்தன.

உடைதொளதொளத்திருந்தது.மனைவி கைவிரித்துக் கிட்டே நெருங்கியபோது பரஸ்பரம் பால்மணம் எழுந்திருக்கக் கூடும்.ஓடி வந்துகட்டிக்கொண்டாள் சிறுமி.குழந்தைமைக் கண்ணில் கண்ணீர் வழிந்து கன்னத்து அழுக்கின் மீது தடம் போடுகிறது.மனைவியின் மார்க்காம்புகளில் ரத்தம்துளிர்த்திருக்கவேண்டும்.''இவளை நம்மகூடக் கூட்டிக்கிட்டுப் போயிடறோம்''- என்று அறுதியிட்டாள்.

அந்த நாளின் மாலை நேரத்தில் நான், மனைவி,,பாப்பா, என் அப்பா நால்வருமாக எங்கள் தோட்டம் போயிருந்தோம்.தொலைந்தவற்றின் தடம் உணரக்கூடியதே.''கார் என்னங்கப்பா ஆச்சு?" என்றேன்.''அது... ஒரு நாலு எருமைக ஒரே நேரத்துல விலைக்கு வந்திச்சு. இதை வித்து அதுல போட்டுட்டேன்." ''நல்லது.''''கிடாவெட்டு தோட்டத்துலதான் வச்சு...''''போன்ல சொன்னாங்க.ஏன் எங்களுக்குக் கூடச் சொல்லல." என்றாள் மனைவி. ''உங்க ரெண்டு பேருக்கும் லீவு கிடைக்காதுன்னு நினைச்சிட்டனம்மா..." என்று அப்பா சமாதானமாகச் சொன்னார்.

''அத நீங்களா முடிவு பண்ணிக்கறதா...ஒரு நாள் லீவு போட முடியாத நிலைமைல நாங்க இல்லை மாமா." நான், '' கெடா வெட்டு எங்க... குலச்சாமிகோயில்லயா..." என்றதும், "கார்வாங்கினதுக்குத்தான்..." என்றார். "கார் வாங்கினதுக்கா க கிடா வெட்டுனதா .." என்றேன்.அப்பா அமைதியாக நடந்துகொண்டிருந்தார்.தோட்டத்தின் அமைதியை சிள்வண்டுகள் இரைச்சலாக எடுத்துக்கொண்டிருந்தன.

வேலிக்கால் ஓரமுள்ள கடைசிச் சிறகின் நீர்ப்பாய்ச்சல் வாய்க்காலின் ஒரு இடத்தைக் கைகாட்டினார் அப்பா.''இங்கதான்.''''இந்த இடத்துக்கு என்ன?''''நம்ம கிடாவெட்டு தோட்டத்துலதாண்டா.. வந்தவங்க பூரா ஒரே கூட்டமா கலகலன்னு இருந்துச்சு. .. இங்க இருக்குது....."

தாழ்வில் வளைந்து பிறகு நேரோடிய தென்னை மரத்தின் அடிப்பகுதியைக் கைகாட்டினார் அப்பா.''. பாப்பா அநாதயாட்டமா இவடத்திக்கு நின்னுக்கிட்டு எங்கியோ பாத்துக்கிட்டு நின்னாடா..எனக்கு ஆத்திரம் தாங்க முடியல. அப்படியே தனியா போயிட்டேன் .....பத்து நிமிஷம் அழுதண்டா."

முன் நிகழ்வுகளின் பின்னோட்டம் அவரது கண்ணோரம் இருந்த்து. பிறகு,நால்வரும் வீட்டுக்கு வந்துவிட்டோம்.பாப்பாவும் மனைவியும் அம்மாவும் அரிந்த காய்கறிகளில் இருந்து எயிற்றுச் சிவப்பையும் பற்களின் வெண்மையும் பெற்று சிரித்துக்கொண்டிருக்கும் ஒலி கேட்டவாறிருந்தது.அப்பாவும் நானும் வெளித்திண்ணைக்கும் வெளியே நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தோம்.

அப்பாவிடம் ஒரு நெருக்கமான குரல் , '' மருமகள்லா வந்தாச்சாட்ட இருக்குது. சட்டுனு ரெண்டு நாளைக்குள்ள ஒரு கிடாவெட்டைப் போடவேண்டியதுதான?" என்று கேட்கிறது.''ஆட்டுக்கிடா வெட்டிக் கட்டுபடியாகாது. இனி ஒரு ஒட்டகத்தை

வெட்டிறவேண்டியதுதான்.” என்றேன் நான்.அப்போது , ஒட்டகங்கள், அவற்றின் பிடரியின் நரம்பைவிட நெருக்கமாயிருக்கிற பாலைவனங்களை மறந்துவிட்டிருந்தேன்.